1975 அக்டோபர் 28]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு இவைகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பேரவையால் நிறைவேற்றப் பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்:—

(1) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975).

(2) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975).

(3) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/1975).

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 22/1975).

(5) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 29/1.

(பிற்பகல் 4-30)

3. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) **1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை** நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு **எண் 47/1975).**

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 47/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கோவை நகராட்சி மன்றத்தை மாநகராட்சி ஆக்குவதற்காக தனி அதிகாரி ஒருவர் போடப்பட்டிருப்பதை மனதார நான் வரவேற்கிறேன். அதற்காக அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன். கூடியவிரைவில் அது மாநகராட்சியாக இயங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அரசிடம் வற்புறுத்திக்கூற விரும்பு கிறேன். மாநகராட்சி ஏற்பட்ட பிறகு, அதிலே புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் எவையெவை வரி செலுத்தக்கூடிய பகுதிகள், எவையெவை வரி செலுத்த முடியாமல் கிளர்ச்சிகள் செய்யக்கூடிய பகுதிகள் என்பதை

@ 272–273ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.